# முதல் இடைப்பருவத் தேர்வு – 2024

## ஆறாம் வகுப்பு

**நேரம்: 1.30 மணி** **சமூக அறிவியல்** **மதிப்பெண்கள்:50**

**I சரியான விடையைத் தேர்வு செய்க.** **8x1=8**

1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை ________
   அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
   இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்
2. பரிணாமத்தின் வழி முறை ________
   அ) நேரடியானது ஆ) மறைமுகமானது இ) படிப்படியானது ஈ) விரைவானது
3. தான்சானியா ________ கண்டத்தில் உள்ளது.
   அ) ஆசியா ஆ) ஆப்ரிக்கா இ) அமெரிக்கா ஈ) ஐரோப்பா
4. புவி தன் அச்சில் சுழல்வதை இவ்வாறு அழைக்கிறோம்
   அ) சுற்றுதல் ஆ) பருவ காலங்கள் இ) சுழல்தல் ஈ) ஓட்டம்
5. மகர ரேகையில் சூரியக் கதிர்கள் செங்குத்தாக விழும் நாள் ________
   அ) மார்ச் 21 ஆ) ஜூன் 21 இ) செப்டம்பர் 23 ஈ) டிசம்பர் 22
6. இந்தியா ஒரு ________ என்று அழைக்கப்படுகிறது.
   அ) கண்டம் ஆ) துணைக்கண்டம் இ) தீவு ஈ) இவற்றில் எதுமில்லை
7. ________ மாநிலத்தில் ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.
   அ) கேரளா ஆ) தமிழ்நாடு இ) பஞ்சாப் ஈ) கர்நாடகா
8. இளவழகி சிறந்து விளங்கிய விளையாட்டு ________
   அ) செஸ் ஆ) மல்யுத்தம் இ) கேரம் ஈ) டென்னிஸ்

**II கோடிட்ட இடங்களை நிரப்புக:** **8x1=8**

1. பழைய கற்கால மனிதன் பெரும்பாலும் வாழ்ந்த இடங்கள் குகைகள்
2. வரலாற்றின் தந்தை ஹெரோடோடஸ்
3. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால், நம் முன்னோர்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தார்கள்.
4. கலப்பை கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு விவசாயத்தை எளிதாக்கியது.
5. சூரியக் குடும்பத்தின் மையம் சூரியன்
6. அதிக துணைக்கோள்களைக் கொண்ட கோள் வியாழன்
7. தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட ஆண்டு 2004
8. சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார்

**III பொருத்துக** **8x1=8**

1. அசோகர் – 4 செவ்வாய்
2. மதச்சார்புள்ள இலக்கியம் – 8 சட்டத்தின் முன் அனைவரும் சமம்

lalithhschool YouTube Channel
www.Padasalai.Net
Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. வெப்பமான கோள் – 1 மிகவும் புகழ் பெற்ற அரசர்
4. செந்நிறக் கோள் – 2 தேவாரம்
5. உருளும் கோள் – 7 மதம்
6. நீக்ரிட்டோக்கள் – 3 வெள்ளி
7. ஜொராஸ்டிரியம் – 5 யுரேனஸ்
8. பிரிவு 14 – 6 இந்திய இனம்

IV சரியா? தவறா? கூறு. 4x1=4

1. அசோகரது காலத்தில் புத்தசமயம் நாடு முழுவதும் பரவியது.
2. பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருள்கள் தொல்லியல் துறையினரால் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.
3. மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும்.
4. மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட முதல் விலங்கு ஆடு.

V கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி (ஏதேனும் 6) 6x2=12

1. வரலாறு என்றால் என்ன?
2. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை?
3. தொடக்ககால மனிதர்கள் எதை அணிந்தார்கள்?
4. மனிதர்கள் ஏன் இடம் விட்டு இடம் நகர்ந்தார்கள்?
5. உட்புறக் கோள்களை பெயரிடுக.
6. சூரிய அண்மை என்றால் என்ன?
7. பன்முகத் தன்மையினை வரையறு.
8. இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை நிலவும் நாடு என ஏன் அழைக்கப்படுகிறது?
9. பாகுபாடு என்றால் என்ன?

VI விரிவான விடையளி (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்) 1x5=5

1. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்களுக்கு நாய் எவ்வாறு பயனுள்ளதாக இருந்தது?
2. உட்புற மற்றும் வெளிப்புறக் கோள்கள் – வேறுபடுத்துக.
3. மொழிசார் பன்முகத்தன்மை மற்றும் பண்பாட்டு பன்முகத் தன்மையினை விளக்குக.

VII கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட பகுதிகளை குறிக்கவும். (ஏதேனும் ஐந்து மட்டும்) 5x1=5

அ) டெல்லி ஆ) சென்னை இ) தமிழ்நாடு ஈ) ஆந்திர பிரதேசம்
உ) கேரளா ஊ) கர்நாடகா

***/***

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
ilamvighi School YouTube Channel

# Mid-Term-I August-2024
## 6th Std. Social Science Key
## Cuddalore District

I. சரியான விடையை தேர்வு செய்க
1. ஆ) வேட்டையாடுதல்
2. இ) படிப்படியானது
3. ஆ) ஆப்பிரிக்கா
4. இ) சுழல்தல்
5. ஈ) டிசம்பர் 22
6. ஆ) துணைக்கண்டம்
7. அ) கேரளா
8. இ) கேரம்

ம. மரிய அந்துவான்

கோடிட்ட இடத்தை நிரப்புக
1 குகைகள்
2. ஹேரடோட்டஸ்
3. நாடோடி
4. சக்கரம்
5. சூரியன்
6. வியாழன்
7. 2004
8. பி.ஆர். அம்பேத்கர்

பொருத்துக
1. அசோகர் – மிகவும் புகழ் பெற்ற அரசர்
2. மதச்சார்புள்ள இலக்கியம் – தேவாரம்
3. வெப்பமான கோள் – வெள்ளி
4. செந்நிறக்கோள் – செவ்வாய்
5. உருளும் கோள் – யுரேனஸ்
6. நீக்ரிட்டோக்கள் – இந்திய இனம்
7. ஜொராஸ்டிரியம் – மதம்
8. பிரிவு- 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்

சரியா? தவறா?
1. சரி
2. சரி
3. சரி
4. தவறு

IV. சுருக்கமாக விடையளி (ஆறு) 6 X 2 = 12

1. வரலாறு என்றால் என்ன?
வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின் கால வரிசைப் பதிவு ஆகும்.

2. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை?
வரலாற்று ஆய்வுக்கு பயன்படும் தொல்பாருட்களை பாதுகாத்து, வரலாறு எழுதுவதற்கு உதவி புரியும் நிறுவனமே அருங்காட்சியகங்கள் ஆகும்.

3. தொடக்க கால மனிதர்கள் எதை அணிந்தார்கள்?.
இலைகள், விலங்குகளின் தோல், மரப்பட்டைகள்.

4. மனிதர்கள் ஏன் இடம் விட்டு இடம் நகர்ந்தார்கள்?
உணவினைத் தேடி

5. உட்புற கோள்கள் யாவை?
புதன், வெள்ளி, பூமி மற்றும் செவ்வாய்

6. சூரிய அண்மை என்றால் என்ன?
புவி தன் சுற்றுப்பாதையில் சூரியனுக்கு மிக அருகில் வரும் நிகழ்வு

7. பன்முகத் தன்மையினை வரையறு.
நாம் ஒவ்வொருவரும் பல மொழிகள், உணவு முறைகள், விழாக்கள் முதலியவற்றைப் பின்பற்றுகிறோம். நமது வாழ்க்கை முறையிலும் வேறுபட்ட பின்புலங்கள், பண்பாடுகள் வழிபாட்டு முறைகளைச் சார்ந்திருக்கிறோம். இதுவே பன்முகத்தன்மை என அறியப்படும்.

8. இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை" நிலவும் நாடு என ஏன் அழைக்கப்படுகிறது?
இந்தியா பன்முகத் தன்மை நிறைந்த நாடாக இருப்பினும் நாட்டுப்பற்று என்ற உணர்வால் நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம். இதனால் இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை நிலவும் நாடு என அழைக்கப்படுகிறது.

9. பாகுபாடு என்றால் என்ன?
சமத்துவமின்மை, மக்களுக்கெதிரான எதிர்மறையான செயல்களே பாகுபாடு எனப்படும். சாதி ஏற்றத்தாழ்வு, மதச் சமத்துவமின்மை, இன வேறுபாடு அல்லது பாலின வேறுபாடு போன்ற பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் பாகுபாட்டை வளர்க்கின்றன.

ம. மரிய அந்துவான்

விரிவான விடையளி (ஒன்று மட்டும்) 1 X 5 = 5

1. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்களுக்கு நாய் எவ்வாறு பயனுள்ளதாக இருந்தது?
நாய்கள் தமது கூர்மையான மோப்ப உணர்வினால் கொடிய விலங்குகளின் வருகையை அறிந்து கொண்டு குரைத்தன.

ilahi high school YouTube channel
www.Padasalai.Net
Scanned with CamScanner

இதைக் கண்ட மனிதர்கள், நாய்களைப் பழக்கி, தங்கள் பாதுகாப்பிற்காகவும், வேட்டையாடுவதற்காகவும் வேட்டை யாடப் போகும்போது உடன் அழைத்துச் செல்லத் தொடங்கினர்.

**2. உட்புறக் கோள்கள் வெளிப்புறக் கோள்கள் வேறுபடுத்துக**

| உட்புறக் கோள்கள் | வெளிப்புறக் கோள்கள் |
|---|---|
| சூரியனுக்கு அருகில் உள்ள நான்கு கோள்கள் புதன், வெள்ளி, புவி, மற்றும் செவ்வாய் | சூரியக்குடும்பத்தில் உள்ள கடைசி நான்கு கோள்கள் வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் |
| இவை உட்புறக் கோள்கள் அல்லது "புவிநிகர் கோள்கள் என்று அழைக்கப்படுகின்றன | இவை 'வெளிப் புறக்கோள்கள்' அல்லது 'வியாழன் நிகர் கோள்கள்' |
| பாறைகளால் ஆன இக்கோள்கள் அளவில் சிறியன | இக்கோள்கள் வாயுக்களால் நிரம்பிக் காணப்படுவதால் 'வளிமக் கோள்கள்" என அழைக்கப்படுகின்றன |
| இக்கோள்களின் மேற்பரப்பில் மலைகள், எரிமலைகள் மற்றும் – தரைக்குழிவுப் பள்ளங்கள் காணப்படுகின்றன. | செவ்வாய். வியாழன் கோள்களுக்கிடையே 'சிறு கோள் மண்டலம் காணப்படுகிறது |

**3. மொழிசார் பன்முகத்தன்மை மற்றும் பண்பாட்டு பன்முகத்தன்மையினை விவரி**

மொழிசார் பன்முகத்தன்மை

இந்தியாவின் 2001-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இங்கே 122 முக்கிய மொழிகளும், 1599 பிற மாெழிகளும் உள்ளன. இதில் திராவிடக் குடும்பத்தின் பழமைமிகு மொழியாக தமிழ் விளங்குகிறது.

பண்பாட்டு பன்முகத்தன்மை

பண்பாடு என்பது மக்களின் மொழி, உடை, உணவு முறை, சமயம், சமூக பழக்க வழக்கங்கள், இசை, கலை, கட்டடக் கலைகளின் பாரம்பரியத்தை குறிக்கிறது.

இந்தியாவின் 29 மாநிலங்களும் 7 யூனியன் பிரேதேசங்களும் தங்களுக்கான உயர்ந்த மரபையும் நுண்கலைச் சிறப்புகளையும் பெற்றுள்ளன.

**24. இந்திய வரைபடம்** (5 இடங்கள்)




M.Maria Anthuvan
GHS, Kattukudalore
Cuddalore Dt.
9443282980

Scanned with CamScanner